**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 284/2019**
**நாள் 04/08/2025 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சுரேஷ் | த/பெயர் – மோகன் |
| வயது – 45 | தொழில் – |
| விலாசம் – எண் 203 ரேணுகா பிளாட், 8வது குறுக்கு தெரு, பிரகாஷ் நகர், திருநின்றவூர் | |

**முதல் விசாரணை–**

சாட்சி ஆஜர் அவருடைய முதல் விசாரணையை பொருத்து. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அவர் மூலம் கீழ்க்கண்ட ஆவணங்கள் அவர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டன.

1. (1). 31.05.1984 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் வா.சா ஆ 1 ஆகவும்,

(2). 04.07.2008 தேதியிட்ட கணினி சிட்டா அசல் வா.சா ஆ 2 ஆகவும்,

(3). மோகன் என்பவரின் இறப்பு சான்றிதழ் பதிவிறக்க நகல் வா.சா ஆ 3 ஆகவும்,

(4). மோகன் என்பவரின் வாரீசு சான்றிதழ் நகல் வா.சா ஆ 4 ஆகவும்,

(5). வாதிகள் பெயரில் உள்ள கூட்டு பட்டாவின் கணினி நகல் வா.சா ஆ 5 ஆகவும்,

(6). புகைப்படங்கள் (2 எண்ணிக்கை) மற்றும் குறுந்தகடு வா.சா ஆ 6 ஆக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

(7). வழக்கு சொத்தின் வழிகாட்டு மதிப்பு வா.சா ஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

(8). நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**